SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

உ புத்தகம் சஞ்சிகை ௰உ] ௲அ௱சஉ (ஹ) ஆனி ௰சு, தேயதி வியாழக்கிழமை, Thursday, June, 16, 1842 [Vol II No 12

சோபனசெய்தி உவது.

(Auspicious occurrences.)

ஒரு யூதன் தல்மட் (Talmud) ஆகமங்களிலுள்ள பாரம்பரையுங் கட்டுக்கதையுமான போதகங்களை விட்டுப் பழையேற்பாடு மாத்திரமே அதிகாரமுள்ள தெய்வீக உண்மையாயிருக்கின்றதென்று விசாரணை பண்ணக்கூடிய நாளே அவனுடைய சரித்திரத்தில் மகா முக்கியமான நாள். ஏனென்றால், இப்படிப்பட்ட மன இடத்துடனே மோசேயின் நியாயப் பிரமாணங்களிலுந், தீர்க்கதரிசனங்களிலுஞ் சங்கீதங்களிலும் எழுதப்பட்டவைகளைக் கவனமாய் வாசித்துப்பார்த்தால் நாசரேத்தூராகிய இயேசு தேவசுதனும், இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மீட்பருமாயிருக்கிறாரென்னும் முக்கியமான உண்மையைப் பற்றிப் பூரணமான அத்தாட்சி அடையாமலிருக்கக் கூடாதென்று தோன்றும்.

ஆனாலும் ஒரு யூதன் இந்தச் சத்தியத்தை முழுதும் வெறுப்பதையும், சிறுபராயந்தொடுத்து அவன் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் போதிக்கப்பட்டதையும் நோக்கிப்பார்த்தால் ஒரு அஞ்ஞானி குணப்படுவதிலும் ஒரு யூதன் கிறிஸ்தவனாக விசுவாசித்து மனந்திரும்புவதே மிகவும் அதிசயமாய் இருக்கும். அவர்களிலுள்ள வெளிச்சம் இருளாய்ப் போனதினாலே அந்த இருள் எவ்வளவு பெரிதாயிருக்கும்! எப்படியெனில் கிறிஸ்துநாதர் பிறந்தநாள் தொடுத்து இதுவரைக்கும் ௲அ௱சஉ வருடகாலமாயிருந்தும், அவரைச் சிலுவையிலறைந்தவர்களுடைய சந்ததியாராகிய யூதரோ இதுவரைக்கும் அவர் பிறந்ததை அறியாமல் அவர் வருவாரென்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் துக்கப்படத்தக்கவிதமாய் நம்பி மோசம்போய் மனமடிவுண்டானதினால் இப்படிப்பட்ட ஆயத்தமுடைய வருகையைக் குறித்துச் சமுசயமான எண்ணங்கொண்டு தங்கள் பிதாக்களுடைய பாரம்பரை நியாயங்களிலும் அவர்கள் எழுதிவைத்தவைகளிலும், தங்கள் சுயவேத எழுத்துக்களிலேதானும் அவர்கள் சாதித்த விசுவாசத்தையும் விட்டுவிட ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆகையால், புறசாதியாரான கிறிஸ்தவர்களுடைய முயற்சிகளுடனே, யூதர் குணப்படும்படிக்குத் தயிரியப்படத்தக்க தோற்றம் அவசியமாய் நடந்தேறுவதினாலேதான் பயபத்தியுடன் துதியைப் பராபரனுக்குச் செலுத்தும்படி ஏவிவிடுகிற இது ஒரு நற்செய்தியாயிருக்கின்றது. சத்தியமென்னும் வெளிச்சத்தில் அவர்கள் வரும்படிக்குப் பராபரன் தமது செயலினாலே அவர்கள் தப்புகளைத்தானும் ஒரு கருவியாகப் பாவிக்கிறார். உதாரணமாக, சென்றுபோன ௲அ௱ச ஆண்டளவில் கிறிஸ்து தோன்றுவாரென்று யூதச்சாதியாரில் மிகுதியான பங்கு அதிக உறுதியாக நம்பியிருந்தார்கள். இதைக் குறித்து நம்பி மோசம்போனதினால், நியூயார்க் (New-york) பட்டினத்திலுள்ள யூதச் சனங்களில் அநேகர் அவர் வருவாரென்ற நம்பிக்கையை விட்டு, அப்பட்டினத்திலுள்ள ஓய்வுநாட் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகள் போய்ப் படிக்கவும், கிறிஸ்துவை வணங்கும்படி கோயில்களுக்குப் போகவும் இடங்கொடுத்தார்கள். ௩௰ வருடத்துக்கு முன்னே யூதர் குணப்படும்படிக்குப் பலவித கிறிஸ்தவர்களாலும் லந்தோம் (London) நகரியில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பற்பல முகாந்தரம் பற்றிய அதிக பிரயாசத்துடனே அது நடந்தேறிவந்ததினால் அது ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் அதிகமாய்ச் சித்திக்கவில்லை. ஆகிலுஞ் சில யூதர் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களானதினாலே அந்தச் சங்கத்தார் நல்ல வேளாண்மையின் முதற் கனியை அனுபவித்து அழுகிறார்களென்று நம்பலாம். உலகத்தின் பல தேசங்களிலுமுள்ள யூதரில் மிகுதியானவர்கள் கிறிஸ்து மார்க்கத்திற் சொல்லப்பட்ட காரியங்களைச் சோதனை பண்ண ஏவப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் மேற்சொல்லியவைகளுக்குக் காரணமானதும் மிகவுங் கவனிக்கப்படத்தக்கதுமான ஒரு செய்தி என்னவென்றால், குணப்பட்டுச் சிறிதுகாலமாய் லந்தோம் நகரியிலுள்ள எபிஸ்கோப்பல் சபையுடனே சேர்ந்து, இப்பொழுது இங்கிலாந்து, அயர்லாந்து (Ireland) என்னும் பட்டினங்களிலுள்ள ஒன்றிப்பான சபையின் விஸ்பவாக (Bishop) கனம்பொருந்திய மிகாயேல் சாலோமோன் (The Right Rev Michael Solomon) என்ற ஒரு யூதன் எருசலேமிலே நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதுதான். அவர் பலஸ்தினவில் (Palestine) இருக்கிற யூதருடைய குருவாகிய சங்கைபோந்த (Rev F G Eward) என்பவருடனேயும் முன் லந்தோம் நகரியிலுள்ள செப ஆலயத்துக்குச் சேர்ந்தவரியாயிருந்த ஒரு குணப்பட்ட யூதனுடனேயுங் கூட ௲அ௱சக ஆம் கார்த்திகை மீ உ௰தி, தாம் நியமிக்கப்பட்ட இடத்துக்குப் போயிருந்தார். சகல காரியங்களையுஞ் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, யூதச் சாதியாரிற் கிறிஸ்தவனை அந்தப் பரிசுத்த பட்டினத்துக்கு ஒரு விஸ்பு (Bishop) ஆக நியமிப்பது இஸ்ரவேலருடைய மீட்புச் சமீபித்திருக்கின்றதென்பதற்கு ஒரு அடையாளமாக எண்ணலாம். இதிலே சொன்ன காரியம் யூதச் சனங்களுக்குப் பராபரன் சொன்ன வாக்குத்தத்தங்களையும் அவைகள் நிறைவேறுதலையும் ஆராய்ந்துபார்க்கும்படி இத்தேசத்திற் பிறந்த கிறிஸ்தவர்களை ஏவத்தக்கதாயிருக்கின்றது. இதைக்குறித்து உரோமருக்கெழுதின ௰௧ம் அதிகாரத்தை எவர்களும் வாசித்துப் பார்ப்பது பிரயோசனமாயிருக்கும். ஏனெனில், மரித்தோரிலிருந்து சீவனுண்டானதுபோல ஒரிரகசியமான காரியஞ் சொல்லப்பட்டது.

(On certain pretended miracles.)

உதயதாரகையின் முகாமைத்துரைகளே,

உங்கள் பத்திரிகையில் சிறியவனெழுதியதற்கு இடங்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். என்னவெனில்,

நான் வெகுகாலமாகப் பெருவியாதி முதலிய பீடையிலழுந்தி, என்னுடைய ஆஸ்தியை விற்றுப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு வைத்தியங்கள் செய்வித்துஞ் சொஸ்தமடையவில்லை. ஆனாலுஞ் சிலநாளைக்கு முன் வேதாரணியமென்னும் பெரிய சிவதலத்தில் மகா பெரிய தருமலிங்கசாமி அநேக அற்புதங்கள் செய்தாரென்றும் அநேகர் அவரிடத்துக்குப் போனதினால் தண்டேல்கள் இடைவிடாமல் தோணியோட்டுகிறதே வேலையாக இருந்தார்களென்றும், சனங்கள் அவரிருந்தவிடத்தில் மண்ணையும் அவருடைய ஒரு பனையிற் பொருக்குகளையும் வழித்துப் புசித்துச் சொஸ்தமடைந்தார்களென்றுங் கேள்விப்பட்டேன். இப்போ அந்தக் கதைகளில்லை. அன்றியும் வடநகரிலே திருவிளக்குச் சந்நிதியென்று ஒரு ஸ்தலமுற்பவித்திருக்குதென்றும் அதிலிருக்கிற அருள்பெற்ற பெரியோர் அநேக அற்புதங்களைச் செய்கிறார்களென்றும் அவர்களிலொரு யோகியனுக்கு ஏருநகையப்புலத்திற் செம்பாடு என்னும் இடத்தில் ஒரு ஸ்திரி ஒரு காரைப்பறைக்குள்ளிருந்து வெளிப்பட்டுத் தரிசனமாய் அவருடனே சம்பாஷணை பண்ணினாரென்றும் உறுதியாய்க் கேள்விப்பட்டேன். இதுவன்றி யாழ்ப்பாணத்தில் ரூமால்கோயிலில் ஒரு குரு அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் மண்ணில் அநேக நோயாளிகள் ஒவ்வொரு பிடிமண் சாப்பிட்டுச் சொஸ்தமாகிறார்களென்றும் இப்படியே ஒவ்வொரு பிடியள்ள அது பெரிய ஆழியகிடங்காகிக் கைவைத்து அள்ளுகிறதற்கெட்டாமையால் ஏணிவைத்திறங்கினார்களென்றும், பின்பு கற்பாறை வந்து பொருந்தபடியால் அதற்குச் சம்பந்த பெரியோருடைய உத்தரவின்படி கூலிக்காரர் இராக்காலத்தில் அழுதழுது மண்சுமந்துகொண்டுவந்து அக்கிடங்கிற் போட்டார்களென்றும் இப்போ அந்தமண் மெத்த அருமையாகி அக்கிடங்குக்குக் கதவுபோட்டுப் பூட்டி ஒருவர் திறப்புவைத்துக்கொள்ளுகிறதென்றும் பெரியோர் சொல்லக் கேள்விப்பட்டேன். அல்லாமலும், புதுமடத்தில் ஒரு மானகோவிலின் விக்கிரகத்திலிருந்து அநேக அற்புதம் நடக்கிறதென்றுங் கேள்வியுற்றேன். இன்னுமொரு காரியமென்னவெனிற் சிலுவையினுருவம் பதிந்த ஓர் ஓட்டை வீட்டுவிறப்பிலே கட்டித்தூக்கியிருந்தால் அவ்வீட்டுக் குடும்பத்தார் பிணிமுதலியவின்றி மெய்யுறுவரென்றும் அவ்வீடு அக்கினியால் எரியுண்ணாதென்றும் அதிற் கள்வர் திருடாரென்றும் நம்பிக்கைகொண்டு சில அறிவாளிக

ளே அந்த நண்டோட்டை வீட்டிறப்பிலே தூக்கியிருக்கிறார்களென்று நிராக்கமாகக் கேள்வியுற்றேன்.

இப்படி அநேக அற்புத பிரபலியங்களைக் கேள்விப்பட்டபடியால் எதிலேபோவேனென்றென் மனமையப்படுகிறதினால் இவைகளின் உண்மையை அறிந்தவர்கள் அடியேன்பேரில் இரக்கங்கொண்டு நான் மேற்குறித்த எந்த இடத்துக்குப்போனால் அல்லது என்னகிரியையைச் செய்தால் சொஸ்தமாகலாமென்று உதயதாரகைவழியாக அறிவிக்கும்படி மன்றாடுகிறேன்.

இப்படிக்கு
பஞ்சதந்திரப்பண்டாரங் குமாரன் தசதந்திரப்பண்டாரம்

பத்திராதிபர் குறிப்பு

தர்மவிநகம என்பவருடைய மாய அற்புதங்களும் வட்டுநகரிலுள்ள பெரியோருடைய அற்புதபிரபலியங்களுந் தந்நயமபெருகுதற்கு எடுத்த உபாயதந்திரங்களென்றி பின்னொன்றல்லவே அன்றியும், ஒரு இருஷியைத் தரிசித்துச் சமயாஷித்தாராம என்று தசதந்திரப்பண்டாரங் கருதிய ஆள் தமக்கு நாயகமானவரிற் பற்றின்றி விலகித் தமது முன்னடையாற் றம்மையும பிறரையும அனுப்பிக் கொண்டாரென்று மனமுடம்பட்டுச் சொல்லுகிறார் குருவானவரொருவர் அடக்கம்பண்ணப்பட்ட மண்ணைச் சாப்பிடுவதினால் அல்லது கோவிலுக்குப் போவதினால் அல்லது நண்டோட்டைக் கட்டித் தூக்கியிருப்பதினால் நோய்கள் தீருமென்று உரோமானகத்தோலிக்கர் சொல்வதை ஏழைகளும புத்தியீனருமேயன்றி மற்றியாரும நம்புவது மதிகேடுதான் "தசதந்திரப்பண்டாரம்" தம் பாவங்களைவிட்டுச் சீர்திருந்திக் கிறிஸ்துவை நம்பிக் கடவுளிடத்தில் பிரார்த்தனையுடனே பரமபிதாவென்றுசெல்லும்படி விரும்புகிறோம் அவர் (கடவுள்) தம்மிடம் புகுகிறவனுக்குக் கொடாமலெந்த நன்மையையும் பின்வையார் பிதா பிள்ளையிலிரங்குவதுபோல ஆண்டவர் தமக்கஞ்சுகிறவர்களுக்கு இரங்குகிறாரென்று தாவீது சொல்லுகிறார் "என்னிடத்து வருகிறவனைப் புறம்பேதள்ளிவிடமாட்டேன்" என்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார் இதைக்கமைந்து சத்திபவிரதமாய தசதந்திரப்பண்டாரம் நடப்பரேல் அவருடைய சரீரத்துன்பங்கணீங்காதுபோயினும மனச்சாந்தமடைவாரென்று நிர்ணயமாயறிந்துகொள்வாராக

(On the truth of Christianity)

சுவிசேஷ உண்மையைப் பற்றிய ஓர் கவனிப்பு

கிறிஸ்துமார்க்க உண்மையை விளக்குகிற அநேக அத்தாட்சிகளுக்குள் தீர்க்கதரிசனம நிறைவேறுதலின் அத்தாட்சிகளுமுண்டு இப்படிப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்களுக்குட் கிறிஸ்துநாதரின் சுவிசேஷஞ் சகல சாதிகளுக்கும பல பாஷைக்காரருக்கும பிரசங்கிக்கப்படுமென்ற வாக்கியங்களுமிருக்கின்றன இவ்வகைத் தீர்க்கதரிசன வாக்கியங்கள் நாளுக்குநாள் நடந்தேறக் காண்கிறோம் அந்த எலியாவின் வேலைக்காரன் சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கையத்தனை சின்ன மேகம எழும்பிச் சீக்கிரத்திலே வானமெங்கும பரந்து பெருமழை உண்டாக்கக்கண்டதுபோல நாமுங் கிறிஸ்துவின் சுவிசேஷம முதல பெலஸ்தினாவிலுள்ள யூதேயா விஞாரில சிறிதாயத் தோன்றியும மிகுந்த இடைஞ்சல உபத்திரவங்களுக்குட் காலத்துக்குக் காலம உலகத்தின் நான்குதிக்கிலும பற்பல கோணங்களிலுஞ் சென்று அநந்தஞ் சாதியாரின் பாஷைகளிலே பிரசங்கிக்கப்பட்டு வருகிறதைக் காண்பதினால் கிறிஸ்துமார்க்க உண்மை மகா துலாம்பரமாய விளங்குகின்றது ஆனாலோ சிலர் இது இங்கிலீஸ்காரர் இராசசியமாகையால அவர்கள் தங்கள் மதாசாரத்தைப் பிரபலியமாக்குகிறார்களென்கிறார்கள் அப்படிச் சொல்லுகிறது தப்பு ஏனெனில், இத்திரை இங்கிலீஷ்காரர் பிடிக்குமுன் புறுத்திகீசரும, உலாந்தாக்காரரும் இதை ஆண்டிருந்தபோதும அவர்களும அச்சுவிசேஷத்தையே கூறினார்கள் அவர்களும அந்த மதஸ்தராகவே இருந்தார்களென்னில், அவர்கள் அம்மதஸ்தராகவும அச்சுவிசேஷத்தைப் பிரசித்தஞ்செய்யப்பண்ணினவரும யார் கடவுளல்லவோ? அல்லாமலும இந்த மகிமையுள்ள சுவிசேஷம இங்கிலீஸ்காரருடைய அரசுக்குச் சேராத அநேக பிறதேச இராச்சியங்களிலும அறிவிக்கப்பட்டு வருகிறதே அலவயாவன, நியுசிலாண்டு, சொசயிட்டி, சாந்துவிச, தென சமுத்திரத் தீவுகள், இலபதோர் என்னும இவ்வகையான வேறநேக தேசங்களிலும இச்சுவிசேஷம பிரசங்கிக்கப்படுகிறதே இது எவரால நடக்கிறது இது இங்கிலீஸ் அரசாணியின்துக்கட்டளையினால நடக்கிறதோ அல்லவே, இது அவனுடைய கட்டளையினால நடவாமலக் கிறிஸ்துவின் சபையினால நடக்கிறது அச்சபை அப்படிச் செய்வது தேவனின கட்டளையேயன்றி மற்றப்படியல்ல நீங்கள் புறப்பட்டு உலகத்தில எங்கும போய்ச் சிருட்டிக்கப்பட்டிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுங்களென்று இயேசுவானவர் கட்டளையிட்டார் (மாற்கு ௰௬. ௰௫)

உலகத்திலே ஒரே தேவனுண்டென்று ஒத்துக்கொண்டால அவர் எல்லா மனிதருடையவுந் தேவனாக இருப்பாரே அவர் எல்லா மனிதருடையவுந் தேவனாகவிருந்தால எல்லா மனிதருக்கும இட்டேற்ற வழியையும அறிவிக்கச்சித்தமாயிருப்பாரே, ஏனெனில எல்லா மனிதரும பாவிகள், அவர் தமது தயாபர குணத்தினால மனிதசாதிகளுக்கு இசசீவியத்துக்குத் தேவையான பொது நன்மைகளை வித்தியாசமில்லாமற் கொடுத்தால மறுமைக்கேற்ற ஆத்தும நன்மைகளைக்கொடாதிருப்பாரோ? கொடுப்பார் பின்னை அவைகளை எந்த வழியாகக் கொடுக்கிறாரென்று காண்கிறோம். சுவிசேஷத்தினாலே அல்லவோ, அதற்குச் சந்தேகமென்ன? வித்தியாசமின்றிச் சகல சாதிகளுக்கும அதனை அனுப்பி அதின வழியாய மனிதருக்கிட்டேற்றத்தைக் கற்பிக்கிறார் இவ்விதமாக வேதவாக்கியத்தில அறியாமையுள்ள காலங்களிற் பராபரன் காணாதவர்போலிருந்தார் இப்பொழுது மனந்திரும்பவேண்டுமென்று எவ்விடத்துமுள்ள மனிதர் யாவருக்குங் கட்டளையிடுகிறாரென்று எழுதப்பட்டிருக்கின்றது (அப. ௰௭. ௩௰,) ஆதலால தமிழர் அறியவேண்டியது இது தேவனுடைய கட்டளை இது அவருடைய மார்க்கம இதனை உங்களுக்கும அவர் அனுப்பியிருக்கிறார் ஏனெனில, நீங்களும பாவிகளாக இருக்கிறீர்கள் நீங்கள் இதனை ஏற்றுக்கொண்டால இதனால பாவமன்னிப்பு, பரிசுத்த மோட்சகதி இவையெல்லாம் அடைவீர்கள் மற்றும்படி உங்கள் பாவங்களிலே கெட்டுப்போவீர்களென்றறியுங்கள்.

இப்படிக்கு
௲அ௱௪௨௵ பங்குனி மீ அதி   மட்டைக்களப்பு
யோவான பிலிப்பு

மகா கனம்பொருந்திய துரையவர்களுக்கு வந்தனம

தங்கள் தாரகை, ௨ பு ௱ங்கம பக்கத்தின்கண் மதுரைப்பதி வாழும கோமஸ்தா பெரியசாமி முத்துக்கருப்பபிள்ளையவர்கள் எழுதிய பாட்டுக்கொத்த வேறோர் பாட்டின் அருத்தமென சிற்றறிவிற்குப் புலப்படாமையால அவ்வருத்தத்தைத் தங்கள் தாரகைமூலமாய் யாமறிந்துகொள்ளும்படி உமது பத்திரிகையிலோர் கோணத்திற் பதிக்கும்படி வேண்டாநிற்கின்றேன் மேலுமிப்பாட்டில் யாதொருபிழையிருந்தால அதையுந்திருத்தி அருத்தத்தையும அறிவிக்கும்படி கேட்கிறேன்

பாட்டு, ராகம். மோகனம

ஏதுக்கழுகுதிந்தலோகமதை
ஏனென்றுகேட்பவரில்லையே.

சோதிக்குஞ் சோதிமந்திரகிரிவேலா சித்தமிரங்காமல் நினையும் நினையாமல் ஏதுக. பட்சியின குஞ்சொன்று பாம்பை முழுங்கிற்று பதினாலுலோகமும பாழாய்ச் சமைஞ்சுது, உச்சிதமாய பூனை ஆனையைத்தின்றுது ஒன்பதுபெண்களை யோனொன்று முழுங்கிற்று ஏதுக் எலிவந்துநின்றுது பூனையைத்தின்றுது எதிர்த்துப் பம்பானபேரை ஈயதின்றுபோச்சுது, புலிவந்துநின்றுது பசுவந்துதின்றுது பொய்யுமெய்யாச்சுது மெய்யும்பொய்யாச்சுது ஏதுக் எருதுபசுப்புலியும் ஆனையிலேறிற்று எள்ளைக்கொள்ளென்றுசொல்லி எங்குநிலைச்சுது பொரிச்சதுநடக்குது அவிச்சதுமுளைக்குது பொய்யென்றுசொன்னவர் போவார் நரகத்தில ஏதுக.

இப்படிக்கு   விநாயகமூர்த்தி

திருவண்ணைநகர் ஸ்ரீ. ஸ்ரீ த அம்பலவாணர் அவர்கள் எட்டாஞ்சஞ்சிகையிற கனவைப்பற்றி வினவியவினாவிற்குக் "கனவியார்த்திப்பிரியன்" என்பவரெழுதிய விடை அவர்வினாவின் ஓர்பகுதிக்கு விடையாயிருக்கிறதினால மற்றப்பகுதிகளுக்கு யானறிந்தளவு பின்வருமோர் சஞ்சிகையில விடையெழுதத் துணிகிறேன்.

௪௨ ஆ ஆனி மீ ௰௧ தி   இப்படிக்கு
உண்ணாநகர்   கோவைத்தியன்   சி விநாயகமூர்த்தி.

உதயதாரகையை வாசிப்பவர்களில் (௨௭) பேரால் எழுதப்பட்டது.

ஓய் பத்திராதிபதியவர்களே,

நாங்களெல்லாருங் கூடி உதயதாரகையைப் பற்றிப் பேசி முடித்த தீர்ப்பைத் தங்கள் பத்திரிகையின் வழியாய் யாவருக்கு மறிவிக்கும்படி பிரியங்கொண்டோம்.

தாரகையை வாசிப்பவர்களே,

௧வது நாங்களெல்லாருமறிந்தபடி ஆதிமுதல் நல்லூர் மாணாக்கனுக்குந் தமிழ்ப்புலவர் ம௱ ௱ ஸ்ரீ வதகிரிமுதலியாருக்குமுண்டான தருக்கத்தின் பேரால் முதலியாரெழுதினதில் மாணாக்கன் வீணாய்க்காட்டிய குற்றங்களைத்தானே முகாமைக்காரர் பிரசுரஞ் செய்தது சரியான காரியமல்ல. ஏனென்றால் "குட்டியாடுகெ முத்தாலும் வழுவழுப்புப் போகாதே"—முதலியார் தன் குற்றத்தை நிராகரித்ததுமன்றி யம்மாணாக்கன்மேலே(௰)க்குற்றங்களையுங் காட்டினார். அதன்பின் முகாமைக்காரர் மாணாக்கன் பேரிலே தயவாய் அவர் குற்றத்தை நிராகரிக்கக்கொள்ளச்சொன்னார்களே, மாணாக்கன் நிராகரியாது விட்டதற்கு முகாமைக்காரரென்ன செய்வார்கள், பின்பு அவர்கள் பேரிலே குற்றஞ்சாட்டுகிறீர்கள்.

௨வது உடுப்பிட்டி இலக்கணநுட்ப விசாரணைகாரனென்பவர் வினாவிய வினாவிற்கு யாழ்ப்பாண மாணாக்கன் விடையெழுதினயுத்திநுட்பத்தை மறுத்து முன் முதலியார் அவர்கள் (௰) குற்றங்களை மாணாக்கன் மேற் காட்டினாரென்று இலக்கணநுட்ப விசாரணைகாரனும் (௰) குற்றங்களைக் காட்டினார். இதனால் வவினாவையிவர் தரசத்துக்கலலாமல் அறியாமையால் வினாவினாரல்லவென்று விளங்குகின்றதே. அறியாமையினால் கேட்டதானால் ம௱ ௱ ஸ்ரீ பரமசாமியையரைப்போல இவரும் யாழ்ப்பாண மாணாக்கன் விடையையொத்துக்கொண்டு இன்னும் இலக்கணக்கலைஞருந் தங்கள் கருத்தை யறிவிக்கக்கேட்கலாமே. பின்பு யாழ்ப்பாண மாணாக்கன் தன் மேற்குற்றத்தை நிராகரித்துத் தன் விடையைத்தானே சரியெனக்காட்டினதில் நாம் யாது குற்றங்களைக்கண்டோம். இவ்விருவருக்கும் சமாதானமென்று நல்லூர் ம சரவணமுத்து என்பவரெழுதிய கடிதத்தை யாருங் கண்டார்களே. அதைச் சமாதானமென்று சொல்லலாமா? ஒருவன் கேட்டுக்கொண்டதற்காக ஒருவனைப் புகழ்ந்தும் மற்றவனைப் பிழையாக்கியுமெழுதுவது சமாதானமா? இதுவே யொருத்தலைவழக்கென்பார்கள். இவரிலக்கணநுட்ப விசாரணைகாரனுக்காயெழுதினது சரியல்லவென்று சேட்சாவதானப்புலவர் முதலிய பற்பல விற்பன்னர்களிச்சமாதானத்தை நிராகரிக்க இவருக்காயும் அவருக்காயும் பலரெழுதியும் நியாயத்தின்படியே தமிழ் நன்குணர்ந்த யாழ்ப்பாண மாணாக்கன் விடையே துலக்கலாகாமலேயென நிற்கின்றது. ஐயா இவ்விதத்தொந்தரவுக்கு முகாமைக்காரரென்ன செய்வார்கள்? இன்னுமவன்தானென்றவர் ஆருக்கு வெல்லியென்று கூறுக்குச் சொல்லக்கேட்டார் ஆரையோவென்றால் இலக்கணக்களஞ்சியத்திலே இடையினத்துக்கினமுண்டென்கூறின ம௱ ௱ ஸ்ரீ அட்டாவதானி வே[illegible]கிரிமுதலியாரையே, இனிப்பிடிக்குப்பிடி செய்வாரப்பார்களா? இன்னுமவனுக்காய முதலியார் முறைக்குமுறை இடையினத்தைப்பற்றி யெழுதுவாரா? எல்லாருஞ் சந்தோஷப்பட உதயதாரகையைப் பிரசுரஞ் செய்யக் கருத்தாவாலும் முடியாதே.

௩வது உடுப்பிட்டி மாணாக்கன் வைத்தியலிங்கனென்பவர் நன்னூற்காண்டிகையுரையின் "வருநகுல டு" என்னுங் கட்டளைக்கவித்துறை கவிப்பாவென்றிருப்பதின் காரணம் யாதெனவினாவியதினுந் தருக்கத்தை யுண்டுபண்ணி அந்த அற்பக்கேள்வி தாரகையில் எவ்வளவிடத்தைத் தடங்கல் பண்ணிற்றென்பதை நீங்களே பாருங்கள். வைத்தியலிங்கர் வினாவிற்றானே கருவிளங்காயையுங் கூவிளங்காயென இவர் எ, அ வரிக்குள்ளே ஒரு பிழைவிட்டால் பெரிய புத்தகங்களை உண்டுபண்ணி அச்சடிப்பிக்குமபோதெவ்வளவு பிழைகளுண்டுபடும். இதிலுந் தர்க்கம் வளர்க்கலாமா? இவ்வைத்தியலிங்கருக்கு விடையெழுதினவர்தானே வர வர வீணாய்க் கூறிய குற்றங்களை நிராகரிக்கச் சமயமிட்டெல்லாமிருந்தும் இச்சின்னக் காரியத்தை இவ்வளவு பெருப்பிக்கலாகாதென்று விட்டுவிட்டதற்காய் அவருக்கு நாங்களெல்லாரும் மனமகிழ்ந்து சலாஞ்சொல்லுகிறோம்.

௪வது. திருவல்லை ம௱ ௱ ஸ்ரீ குமாரசாமிமுதலியார் பள்ளிக்கூடமாணாக்கன் ம௱ ௱ ஸ்ரீ பரமசாமியையர் வினாவியவினாவிற்கு ஆ நா யோதரம்பிள்ளை விடையெழுதியும் அதின் குற்றங்களை அறிந்தும் எடுத்துக்காட்டாமல் அவர் விடையையுமொத்துக்கொண்டு தாரகையை நோக்கிக்கொண்டு மேலும் முற்றறிவுடையோரை வை க்காதிருக்கிறாரே ஐயோ வீணாய்த் தூங்கிப்பவர்கள் பரமசாமியையரிடங் கொளுத்தனாளைக்குப் படியுங்களேன். இவர் நற்குருவின் சிஷ்யத்தோற்றுகின்றமத.

௫வது திருநெல்வேலி வைத்தியலிங்கரென்பவருடைய அவதானச் சோதனையைப் பிரசுரஞ்செய்யச் சற்றேனுகிலும் நியாயமில்லை. இவர் சரவணமுத்துவின் சிஷ்யனாயிருப்பதால் சேட்சாவதானப்புலவரை ஏசியெழுதியிருப்பார், பின்னொருவர் மயிலைத்துரையிடத்தில் பாட்டைமாற்றமல் கொடுக்கச்சொன்னார். இனி அவ்வைத்தியலிங்கர் வேறொரு பாட்டையுங் கொடுத்து உபகாரத்தையுங் கொடுத்தாலாகாதா? அதைச் செய்யாவிட்டால் வாங்கியிருந்தால் அவர்களனுப்புவார்கள்? ஆகையால் அவர்கள் அவதானத்தைத் தாரகையில் தமிழ்ப்படித்திருக்கும் பாத்திரமாதானே வைத்தியலிங்கரிடத்திலே ஒரு பாட்டைவாங்கி அதைப் பாத்திரமாக்கத்தானே கலந்துச்சுக்கனுப்பினால் நல்லது. அல்லது சேட்சாவதானப்புலவர் பேரிற் குற்றஞ்சாட்டவேண்டாம். இப்படிக்கு,

இருபத்தேழுபேரொல்லுக்குமெழுதினது

யாழ்ப்பாணம் }
வைகாசி மீ ௰ தேதி } மூத்ததம்பி அருணாசலம்

ஏடிட்டரவர்களுக்கு,

ஐயாவே, தங்களுடைய உதயதாரகைப்பத்திரத்துக்கு நாங்களுஞ் சோப்ஸ்கிறைபராக்கசகையோட்டமவைத்து முறையைப்போல நாங்களுக்குப் பணங்கொடுத்துவருகிறது தங்களுக்குத்தெரியுமானாலும் தாங்களிதைஅறிந்திருந்தும் எங்களுக்கு இப்படிச்செய்கிறது சரியல்ல. அது என்னவென்றால் இனைக்கு இவ்விடத்துத்தபாலகந்தோரில் தங்கள் பத்திரிகை வந்ததோவென்று விசாரிக்கப்போனபோது அவ்விடத்தில் இரண்டு பத்திரிகை மாத்திரம் வந்திருந்தது. அதில் ஒன்று யெஸ்தார் ரேஸ்லென்பவருக்கும் மற்றொன்று இன்னமொருவருடைய பேருக்கும் வந்தது. ஆனாலுமவர்களும் எங்களைப்போல சோப்ஸ்கிறைபராயிருக்க அவர்களுக்குமாத்திரஞ் சீக்கிரமனுப்பவும் எங்களுக்கு இரண்டு மூன்று நாள் போக்கியனுப்பவுந் தங்களுக்கு நியாயமல்ல. தாங்களிப்படிச் செய்வீர்களானால் தங்களுடைய சோப்ஸ்கிறைபர் குறையுமே அல்லாமல் கூடாதென்று நம்புகிறோம். இதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து தங்களுக்கனுப்புகிற காகிதங்களைத் தங்கள் பிரியம்போலச் சிலதைப் பிரசித்தம் பண்ணிச் சிலதைக் காகிதப்பிரத்தியுத்தரமாகப்போட்டுச் சிலதைச் சும்மா வைத்துக்கொள்ளுகிறீர்கள். ஆனாலது உங்களுக்கு முறையல்ல. உங்களுக்குப் பிரசித்தம்பண்ணக்கூடாத காகிதங்களைத் தாங்கள் காகிதப்பிரத்தியுத்தரமாக அறிவிக்கவேண்டும். அப்படியல்லாமற் சும்மா வைத்துக்கொண்டால் நல்லதல்ல. நாங்கள் வேலைவினைக்கெட்டுத் தங்களுக்குக் காகிதங்களையெழுதி அதற்குத் தபாற்செலவுங்கொடுத்து அனுப்புகிறதற்கு நீங்களிப்படிப்பண்ணுகிறது நியாயந்தானா? ஆனாலும் தாங்கள் இனிமேலிப்படிச் செய்யாதபடிக்குத் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு,

கொழும்பில் ௨௨ ஆ }
வைகாசி மீ ௰௨ தேதி } சப்ஸ்கிறைபர்

பத்திராதிபர் குறிப்பு

மேலேப் பிரசுரஞ்செய்திருக்கிற கடிதத்தைப்பற்றி நாங்கள் சொல்லும் மறுமொழியென்னவெனில், கொழும்புக்குப் போகிற தாரகைகளனைத்தையுமொரே வேளையிற் தபாலுக்கனுப்பிப்போடுகிறோம். அவைகளிற் சிலது முந்தியுஞ் சிலது பிந்தியுமங்களிடம் வருவதினால் அது எங்கள் பேரிற் குற்றமல்ல.

இன்னுஞ் சில கடிதங்களை அச்சடியாமல் விட்டுப் போட்டுவைத்ததற்கு நாங்கள் போதுமானமறுமொழி சொல்லக்கூடாதுதான், ஆகிலுமினிமேற் கூடியளவு திருத்திப்பார்ப்போம்.

ஓர்வினா

பவணந்திமுனிவர், தாம்செய்த நன்னூலின் பொதுப்பாயிரத்தின்கட் கூறியதுகூறலென்னுங் குற்றத்துக்கு மாறாகவுந் தாம் சொன்னதற்கு மாறாகவும் மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சிலவற்றை யுத்தியுள்ளுங் கூறியதென்னை? இலக்கணத்தில் வல்லவரிவ்வினாவுக்குத்தரஞ் சொல்லும்படி கேட்கிறேன்.

வண்ணைநகர் வைகாசி மீ. ௧ தேதி கணபதிப்பிள்ளை வயிரமுத்து.

புதினசங்கதிகள்.

ஆபுக்கானிஸ்றன்.

செனறல் போலக்கு என்பவர் சித்திரை மீ° ய௬ந்தி அளவிலே செலலாபாத்துக்குவந்து சேர்ந்து வீர பராக்கிரயமுள்ள சேல என்றதளகர்த்தனைத் துணை கொண்டார் லாகோர் தேசத்திலிருக்கிற பிரிட்டிஷ் கோவரன்மேந்தாரைச் சார்ந்த ரிசைடெண்டானவர் ஆபுகானிஸ்றரோடு சமாதானம்பேசுகிறதாகவும் போஸ்மகம் அவை விடுதலைசெய்து ஆபுகானில் மறியற்படுத்தப்பட்டிருக்கிற சகலரையுமீட்டுக்கொள்ளுகிறதாகவும் ஒரு பேச்சுண்டு இச்சமாதானஞ் சுறுக்குத் தீமானமாகுமென்றும் அந்த மறியற்காரர் எல்லாரும் திரும்பிச் சந்தோஷபரிபூரணத்துடன் தங்கடங்கள் சிநேகிதர்களிடத்துக்குப் போவார்களென்றும் காத்திருக்கிறோம்

கொஞ்சநாளைக்குமுன்னே தற்செயலாய் ஆபுகானிஸ்றர் கைகளில்கப்பட்டுக்கொண்ட ஏரோப்பையர் மிகுந்த தயிரியத்துடனிருந்தவேளையிற் பிறகு அகபாகான் என்பவர் அவர்களைக் காபூல் நகரிக்கப்பாற் கொண்டுபோயத் தீமானம்பண்ணியிருக்கிறதென்னவெனில், என்னுடைய பிதா மாதா முதலான சமாசாரக்குடிவாழ்க்கைகளையும் இங்கிலிஸ்சுக்காரர் மறியலிலிருந்து போகும்படி யுத்தரவளித்தாலொழிய நானும்மோ என்கையிலகப்பட்ட மறியற்காரர்களைத் தப்ப விடமாட்டேனென்று சொல்லியிருக்கிறதாகச் சில சமாசாரபத்திரிகைகளினாற் றெரியவருகின்றது

மேற்கூறிய மறியற்காரர் ஆணும் பெண்ணுமாக இரண்டு பகுதிப்பட்ட கோட்டைகளுக்குள் வைக்கப்பட்டாலும் அவர்களுக்குச் சத்துருக்கள் யாதொரு கேடும் வருத்துவியாமல் மெத்தத் தயவாய் நடத்தினார்கள்

சீனம்

இங்கிலீஸ்காரர் தை மீ° அளவில (யசகோ) என்ற பட்டினத்திற்சென்று சீனரிற் (௰௨) பேரைச் சங்காரம்பண்ணி அவ்விடத்திற் கட்டியிருந்த சாவடிச்சத்திர முதலானவைகளையுமிடித்தழித்து மிகுதியான சனங்களை மறியற்பண்ணிக்கொண்டார்கள்

சிங்கப்பூரிலிருந்துவந்த சமாசாரபத்திரிகைகள் மூலமாய் நாங்களறியவந்ததென்னவெனில், மாசி மீ° அளவிலே கிட்டத்தட்டப் பத்தாயிரஞ் சீனர்கள் நிங்போ என்னும் பட்டினத்துக்குத் தெற்கிலும் மேற்கிலுமிருக்கிற வாசல்கள் வழியாகச் சென்று மதில்களிலேறித் தொற்றியேறிப் பட்டினத்துக்குட்சென்று இங்கிலீஸ்காரருடன் யுத்தம்பண்ணினவேளையில் இங்கிலீஸ்காரரும் அதிவீரசூர சௌரிய பராக்கிரம நெஞ்சுத்துணிவுடன் சீனரோடெதிர்த்து அவர்களைப் பின்காட்டியோடப்பண்ணினவேளையில் சீனரும் மதிச்சகிரவிரைவுடன் பட்டினத்தைவிட்டுக் கொண்டு நிங்போவின் தெற்கு வாசலுக்குட் சென்றார்கள் அவ்வேளையில (௨௱௫௰) சீனர் மதில்களுக்குட் பக்கத்திற் செத்துக்கிடக்கக்கண்டார்கள்

பிறகு சிங்கெளெறப் பட்டினத்தில் யுத்தம்நடந்தவேளையில் சீனரும் பட்டினத்தின் வடக்குச்சுவரில் நின்றபொழுது அவர்களை இங்கிலீஸ் துப்பாக்கிகள் கலைத்துத்துரத்தி (௫௰) சனங்களையும் (௨) மஸ்திருத்துவக் கத்தரளிகளையுஞ் சங்காரம்பண்ணிப் போட்டார்கள் அவ்வேளையிலுஞ் சீனர் திங்கெளெற நகரியிலும் போருக்கெத்தனம்பண்ணுகிறார்களென்று கேள்விப்பட்டவுடனே இங்கிலீஸ் பட்டாளங்களிற் கொஞ்சப்பேர் அவ்விடத்திலும் வந்து சீனருடன் யுத்தம்பண்ணிச் சீனரில் (௫௰) பேரைச் சங்காரம்பண்ணி, அநேகரைப் பாடான காயப்படுத்திப்போட்டார்கள் பிறகு இங்கிலீஸ்காரர் சீனருடைய கப்பல்களுக்கு நெருப்புவைத்துவிட்டுத் திரும்பிச் சிங்கெளெறப் பட்டினத்துக்குப் போய்விட்டார்கள் இப்படி இங்கிலீஸ்காரர் பறபலவிடங்களிற் போர்செய்தாலும் அவர்களிலொருவரென்கிலும் உயிரிழந்துபோனதில்லை

SUMMARY OF NEWS.

AFFGHANISTAN —It is said that orders have been issued for the immediate evacuation of Affghanistan and that preparations are making for the return of the troops

The forces at Jellalabad were suffering for want of tents and other necessaries

The late Sir W. Macnaghten —It is now stated on apparently good authority that Sir W Macnaghten fell a victim to his own treachery He had made terms with Ameen Oola, the chief of the rebels and had agreed to leave Cabul in a few days He afterwards sent secret word to Akber Khan that if he would assist him in securing Ameen Oola he would give him a pension of 2 Lacs of Rps a year and that his father Dost Mahommed should be permitted to return to the country Akber Khan demanded the proposal in writing which was given This paper he took to Ameen Oola and offered to seize the Envoy and bring him before him to answer for his treachery, and then planned the meeting at which he was killed

If this is true, the kind office of hangman which so many are ready to perform for Akber Khan's benefit might more justly be called into exercise in some other direction

In the Dharwar District near Belgaum, the Cholera is making frightful ravages At Kolapoor upwards of 5000 have died, it is said, and so great is the panic that several villages have been almost wholly abandoned

It is stated on the authority of the Wesleyan Journal that 100,000 Spanish Bibles were circulated in Spain between the 1st of September and March of the past year

It is said that in February last the Druses of Syria suspecting some treachery on the part of the British Agent assail'ed the English and American Missions, plundered and destroyed their establishments, burnt their books and Manuscripts and expelled the Missionaries from the country

---

NOTICE—is hereby given by order of His Excellency the Governor in Council, that it is intended to make the following charges upon all Letters and News papers, &c , sent or received by expresses overland to and from Bombay, from this date and until further notice, viz

On every letter not exceeding a quarter of an ounce in weight	2s
" Exceeding a quarter of an ounce and not exceeding half an ounce	3s
" Half an ounce and not exceeding one ounce	5s
" One ounce and not exceeding two ounces	10s
For every additional ounce in weight above the weight of two ounces	5s

And every fraction of an ounce above the weight of two ounces shall be charged as one additional ounce

For every News-paper, Price Current or Shipping Report	5½d
Viz	
Indian Postage - - - -	4½d
Ceylon Postage - - - -	1 d

The weight of the mail by such express is limited to 18 lbs

By His Excellency's Command,

P ANSTRUTHER,
Colonial Secretary

Colonial Secretary's Office,
Colombo, 6th May 1842

மானிப்பாயி அமெரிக்கன் மிசியோன்

அச்சுக்கூடத்திலபதித்துவந்த பெயரகராதி பூரணமாய நிறைவேறியாயிற்று அதை வாங்க விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணத்துச் சங்கைபோந்த பொசிவல ஐயரிடத்திலும், மதுரை சங் டேவிற ஐயரிடத்திலும், ஒரு பிரதிக்கு ஐந்து ரூபாய விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம்.

CONTENTS —அட்டவணை

பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு	137
மகமதுவின் சரித்திரம்	ib
இந்துமதம்	138
புவனசாத்திரமும் அதனைவிளக்கும் படவிபரங்களும்	ib
கடிதங்கள்	140-143
பஞ்சதந்திரக்கதை	144
குறள்—பழமொழி	ib
சோபனசெயதி (௨ வது)	145
கடிதங்கள்	145-147
புதினசங்கதிகள்	148

Historical sketch of the Pandian kingdom	137
Life of Mohammed	ib
On Hinduism	138
Outlines of Geography	138-139
Communications	140-143
Pancha-Tantra-Katei	144
Definitions of the words expressive of the actions of the mind, published in the last No	ib
Cural	ib
Auspicious Occurrences	145
Communications	145-147
Summary of News	148

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.